முருகப்பெருமான் துணை

**மகான் கபிலர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.10.2022, வியாழக்கிழமை

1. தவபலம் கொண்டு கலியிடரை
தகர்த்தெறிய அவதாரம் புரிந்த
அவதார ஆறுமுக அரங்கனே
அண்ணலே உன்பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தரிவை திங்கள்
குறைவிலா இருபானாற் திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 26 ம் நாள் 13.10.2022, வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு கபிலர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை வழிதனை உலகமக்கள்
ஞானமாக அடைந்து தேறவே
ஞானபண்டிதன் சக்தியாக அருளும்
4. அருளும் சக்திமிக்க அரங்கன்
அறமும் சன்மார்க்கமும் தன்னை
இருகண்களாக உலகோர் பாவித்து
ஏற்று வழிதவறா பின்பற்றிவர
5. வருகவே தன்னிலை அறிதலும்
வளர்ச்சி நிலை ஞான வழியோடு
தரும சிந்தையும் பெருகி இனிதே
தவபலமாக ஆற்றல் கூடி
6. கூடியே கலித்துன்பங்களை வெல்லும்
குருவருளோடு திருவருளும் கொண்டு
இடரின்றி வாழும் மன பலமுடன்
எல்லாத் தேற்றமும் அடைவர்
7. அடையவே அரங்கன் தேடும் வழி
அழியாமை கண்ட மக்களாய்
தடைகள் என்பதே இல்லா வண்ணம்
தவமைந்தர்களாய் சிறந்து நிற்பர்
8. நிற்கவே உலகம் எங்கிலும்
நேர்மை நீதிகாக்கும் வண்ணம்
அற்புதமிக்க ஞானப்படைகளாக
அரங்கன் அணிவகுப்பில் தேறி
9. தேறியே ஞானிகளாகத் தேற்றம்
தேசமெங்கும் பெருகி மாற்றம்
அறிவிப்பேன் ஞானிகள் ஆட்சியாக
ஆறுமுகனார் தலைமை கொண்ட வண்ணம்

10. வண்ணமுடன் காலச் சூழல்
வடிவேலனின் சக்கரச் சுழலாக
எண்ணம் எல்லாம் இயக்கமாகி
எங்கும் ஆறுமுகனார் வழிபாடாக

11. ஆகவேச் சிறந்து உலகினில்
அறிவிப்பேன் ஞான ஆட்சி
செகமெங்கும் அரங்கனால் நிகழும்
செப்பிய அனுகூல ஆசி முற்றே

—சுபம்—